இனிய புத்தாண்டு வாழ்த்துகள்... 2024

Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, JANUARY 01, 2024

திங்கட்கிழமை ஜனவரி 01, 2024 | ஒளி: 10 கதிர்: 161 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE




## இனிய புத்தாண்டு வாழ்த்துகள்

2024ஆம் ஆண்டு புத்தாண்டுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் தங்களுடைய வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர். எமது வாசகர்களுக்கும் தமிழ்மிரர் சார்பில் புத்தாண்டு வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்வதில் மகிழ்கின்றோம்.

தொடர்ச்சி P3

# VAT % 18% 'வற்' அமுல்

பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பெறுமதிசேர் வரி (வற்) அதிகரிப்பு, இன்று திங்கட்கிழமை (01) முதல் அமுல்படுத்தப்படும். இதனால், பல பொருட்களின் விலைகள் அதிகரித்தன மற்றும் சேவைகளின் கட்டணங்களும் அதிகரிக்கும்.

இதுவரையிலும் 15 சதவீதமாக இருந்த 'வற்' இன்று (ஜனவரி 1ஆம் திகதி ) முதல் 18 சதவீதமாக அதிகரிக்க உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், கல்விச் சேவைகள், மின்சாரம், சுகாதாரம், மருத்துவம், பயணிகள் போக்குவரத்து, அனைத்து காய்கறிகள் மற்றும் பழங்கள் உட்பட ஏறக்குறைய 90 வகையான பொருட்கள் 'வற்'இல் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்றும், சிறப்பு வர்த்தக வரி விதிக்கப்பட்டுள்ள 65 வகையான பொருட்களுக்கு வற் விதிக்கப்படாது என்று அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சி P2



## தட்டம்மை தடுப்பூசி ஜனவரி 6 ஏற்றப்படும்

தேசிய தட்டம்மை தடுப்பூசி திட்டத்திற்கு சமாந்தரமாக கண்டி மாவட்டத்தில் ஜனவரி 6ஆம் திகதி தடுப்பூசி போடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கண்டி மாவட்ட தொற்றுநோய் நிபுணர் கிஷாந்த சமராச்சி தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## மண்சரிவு அபாயத்தால் 201 பேர் வெளியேற்றம்

மண்சரிவு அபாயம் காரணமாக லுணுகல மற்றும் பசறை பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள 67 குடும்பங்களைச் சேர்ந்த 201 பேர் (30ஆம் திகதி இரவு) அவர்களது இருப்பிடங்களில் இருந்து உடனடியாக வெளியேற்றப்பட்டதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



## 'ஹலோ' கட்டணங்கள் அதிகரிப்பு

'வற்' அதிகரிப்பு காரணமாக திங்கட்கிழமை (01) முதல் தொலைத்தொடர்பு சேவைகள் தொடர்பான வரிகள் 42 சதவீதத்திற்கும் அதிகமாக அதிகரிக்கவுள்ளதாக தொலைபேசி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

## வீட்டிலிருந்து 4 சடலங்கள் மீட்பு

மாலம்பே-கஹந்தோட்ட வீதி பகுதியிலுள்ள வீடொன்றில் இருந்து தாய், மகன்மார் இருவர் மற்றும் மகள் ஒருவரின் சடலங்கள் ஞாயிற்றுக்கிழமை (31)

தொடர்ச்சி P2

## பஸ் கட்டணம் 15% ஆல் அதிகரிப்பு

இன்று (01) முதல் அமுலுக்கு வரும் 'வற்' திருத்தத்தின் காரணமாக பஸ் கட்டணங்கள் 15 சதவீதத்தால் அதிகரிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சி P2

## "டீல் பேசி வந்த கைப்பிள்ளை"

■ க. அகரன்



புலிகளிடம் 40 இலட்சம் ரூபாய் பணத்தினை பெற்று வெளிநாடு சென்று, பின்னர் ஜனாதிபதியுடன் டீல் பேசி நாட்டுக்குள் வந்த கைப்பிள்ளை ஒருவர் மக்களை உசுப்பேற்றி சுயலாப அரசியல் செய்வதாக கடற்தொழில் மற்றும் நீரியல் வழங்கல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## "கைகளை தூக்கிய 113 பேரும் பொறுப்புக் கூற வேண்டும்"



■ எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச

இம்யூனோகுளோபுலின் தடுப்பூசி குப்பிகள் உள்ளிட்ட மருந்துத் துறையில் சமீபத்தில் நடந்த திருட்டு, ஊழல் மற்றும் மோசடி தொடர்பான விசாரணை தற்போது நடைபெற்று வருவதாகவும், இது தொடர்பாக முதலில் குரல் எழுப்பியது

தொடர்ச்சி P2

## துப்பாக்கிச் சூட்டில் சார்ஜன்ட் மரணம்

துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் தெமட்டகொட பொலிஸ் விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவின் சார்ஜன்ட் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் காயமடைந்து கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2



## உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரிப்பு

பால் தேநீர், கொத்து உள்ளிட்ட உணவுப்பொருட்களின் விலைகள் ஜனவரி 1ஆம் திகதி முதல் அதிகரிக்கப்படுவதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## "போராட்டங்களை நசுக்க முடியாது"




■ எஸ்.கார்த்திகேசு

இலங்கை அரசு பொருளாதார நெருக்கடிகளை வைத்து எமது உரிமைப் போராட்டங்களை நசுக்க முடியாது என அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

### மலையக மக்களை கௌரவித்து

## இந்தியாவில் முத்திரை வெளியீடு



இந்தியாவில் இருந்து மலையக பெருந்தோட்டப் பகுதிகளுக்கு தொழிலாளர்கள் அழைத்துவரப்பட்டு 200 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு இந்திய மத்திய அரசாங்கத்தினால் சனிக்கிழமை (30) விசேட முத்திரையொன்று வெளியிடப்பட்டது.

இந்தியாவின் ஆளுங்கட்சியான பாரதிய ஜனதா கட்சியின் புதுடெல்லி அலுவலகத்தில் அதற்கான நிகழ்வு நடைபெற்றது.

பாரதிய ஜனதா கட்சி மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஏற்பாட்டில் நினைவு முத்திரை வெளியிடும் நிகழ்வு நடைபெற்றது.

தொடர்ச்சி P2

## தந்தையின் கட்சி பதவிகளை விட்டு விலகினார் மகன்

■ நூருல் ஹுதா உமர்



தேசிய காங்கிரஸின் உதவி செயலாளர் நாயகமும், அக்கரைப்பற்று மாநகர சபை முன்னாள் முதல்வருமான தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம்.அதாஉல்லாவின் புதல்வர், அதாஉல்லா அஹமட் சகி தனது தந்தையின் கட்சியின் சகல பொறுப்புகளிலிருந்தும் இராஜினாமா செய்துள்ளார்.

தொடர்ச்சி P2

## மற்றுமொரு கைதி மரணம்

காய்ச்சல் காரணமாக மாத்தறை வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த மாத்தறை சிறைச்சாலை கைதி ஒருவர் உயிரிழந்துள்ளதாக சிறைச்சாலை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

53 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

PAGE 1 தொடர்ச்சிகள்

## தட்டம்மை தடுப்பூசி ஜனவரி 6 ஏற்றப்படும்

கண்டி மாவட்ட பொதுச் செயலாளர் அலுவலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மாவட்டத்தின் சுகாதார நிலை குறித்து விளக்கமளிக்கும் போதே வைத்தியர் இதனை வலியுறுத்தியுள்ளார்.

நாட்டில் 700 தட்டம்மை நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவர்களில் 12 பேர் கண்டி மாவட்டத்தில் பதிவாகியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

2019 ஆம் ஆண்டில், உலக சுகாதார ஸ்தாபனம் வெற்றிகரமான தடுப்பூசி திட்டத்தின் பின்னர் அம்மை நோயை ஒழித்த நாடாக இலங்கையை நியமித்தது, ஆனால் கொரோனா தொற்றுநோய் நிலைமைக்குப் பிறகு, இந்தியா உட்பட பல நாடுகளில் தட்டம்மையால் பாதிக்கப்பட்ட பதிவாகியுள்ளனர்.

எவ்வளவு வெற்றிகரமான தடுப்பூசிகள் அறிமுகப்படுத்தப்பட்டாலும், தடுப்பூசிகளை மறுக்கும் குழுக்கள் இருப்பதாகவும், அதனால் நோய்கள் மீண்டும் தோன்றும் எனவும், கண்டி மாவட்டத்தில் சுமார் 350 பேர் தடுப்பூசிகளை மறுத்துவிட்டனர். பிறப்பிலிருந்து அனைத்து தடுப்பூசிகளையும் மறுத்து வருவதாகவும் டாக்டர் கிருஷாந்த சமராச்சி சுட்டிக்காட்டினார்.

## மண்சரிவு அபாயத்தால் 201 பேர் வெளியேற்றம்

லுனுகல டுமோ பிரிவின் கலுல்ல பிரதேசத்தில் மண்சரிவு அபாயம் காரணமாக அபாய வலயத்தில் வசிக்கும் 49 குடும்பங்களைச் சேர்ந்த 151 பேர் உடனடியாக வெளியேற்றப்பட்டதாக லுனுகல பிரதேச செயலாளர் நிரோஷா ஹென்நாயக்க தெரிவித்தார். வெளியேற்றப்பட்ட குடும்ப உறுப்பினர்கள் கல்லுல்லா தமிழ் கல்லூரியில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, பசறை கனவரெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 18 குடும்பங்களைச் சேர்ந்த 51 பேர் வெளியேற்றப்பட்டு பசறை இலக்கம் 03 தமிழ்ப் பல்கலைக்கழக முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என பிராந்திய செயலகம் தெரிவித்துள்ளது.

இரு முகாம்களிலும் உள்ள மக்களுக்கு இரவு முதல் சமைத்த உணவுகளை வழங்கத் தொடங்கியுள்ளதாக பேரிடர் நிவாரண அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதன்படி, பதுளை மாவட்டத்தில் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை 417 ஆகவும், மக்களின் எண்ணிக்கை 1,417 ஆகவும் உள்ளது. 197 குடும்பங்களைச் சேர்ந்த 637 பேர் பத்து முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் பதுளை மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது.

## ‘ஹலோ’ கட்டணங்கள் அதிகரிப்பு

அதன்படி, உள்ளூர் அழைப்புகள், குறுஞ்செய்திகள், கூடுதல் சேவைகளுக்கான மொத்த வரி மதிப்பு 42.02 சதவீதமாகவும், டேட்டா மற்றும் சர்வதேச அழைப்புகளுக்கான மொத்த வரி மதிப்பு 23.50 சதவீதமாகவும் உள்ளதாக நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

சில ப்ரீபெய்டு டேட்டா கார்டுகளின் டேட்டா அளவு குறைக்கப்பட்டாலும், வரிகள் உட்பட அவற்றின் விலைகள் மாறாமல் இருக்கும் என்று சில தொலைபேசி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

## வீட்டிலிருந்து 4 சடலங்கள் மீட்பு

அதிகாலை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சடலங்கள் மாலபே நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த குடும்பத்தின் தந்தை கடந்த 28ஆம் திகதி உயிரிழந்துள்ளதாகவும், இறுதிச் சடங்குகள் சனிக்கிழமை (30) இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பஸ் கட்டணம் 15% ஆல் அதிகரிப்பு

எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் ஏனைய உள்ளீடுகளைக் கருத்தில் கொண்டு கட்டணங்களைத் திருத்துமாறு அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பஸ் கட்டணத்தைத் திருத்தியமைக்காவிட்டால், நாடு முழுவதும் தொடர் பஸ் வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்படும் என்றும் சங்கம் தெரிவித்துள்ளது.

## இந்தியாவில் முத்திரை வெளியீடு

இந்தியத் தபால் திணைக்களத்தினால் இந்த நினைவு முத்திரை வெளியிட்டு வைக்கப்பட்டது.

நிகழ்வின் பிரதம அதிதியாகப் பாரதிய ஜனதா கட்சியின் தேசிய தலைவர் ஜே.பி நட்டா கலந்துகொண்டிருந்தார்.

கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் தலைமையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முக்கியஸ்தர்கள் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.




## 18% ‘வற்’ அமுல்

‘வற்’ விதிக்கப்படாத ஏனைய பொருட்களுக்கு உள்ளூர் சந்தைகளில் கடுமையான தட்டுப்பாடு, கடந்த சில நாட்களாகவே நிலவியது. இதேவேளை, ‘வற்’ விதிக்கப்பட்ட பொருட்களில் பலவற்றை வர்த்தகர்கள் பலரும் பதுக்கிவைத்து, சந்தையில் வேண்டுமென்றே தட்டுப்பாடுகளை நிலவச்செய்திருந்ததாக குற்றச்சாட்டுகளும் முன் வைக்கப்பட்டுள்ளன.

‘வற்’ அதிகரிப்பினால் ஜனவரியில் குடும்பமொன்றில் மாதாந்த செலவு 40 ஆயிரம் ரூபாவினால் அதிகரிக்காது என்று தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், கடந்த நவம்பர் மாதத்தில் குடும்பமொன்றின் மாதச் செலவு 1, 77,687 ரூபாய் 44 சதமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தந்தையின் கட்சி பதவிகளை விட்டு விலகினார் மகன்

தனது இராஜினாமாவைத் தொடர்ந்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், எத்தருணத்திலும் மாறிவிடாத எனது அன்பிலும், மரியாதையிலும் பங்கு கொண்டிருக்கும் தேசிய காங்கிரஸின் பேராளர்களே! நண்பர்களே! உடன்பிறப்புகளே பதவிகள், பட்டங்கள், உயர்வுகள் யாவும் இறைவனின் ஆசியுடன் மனிதர்களுக்கு வழங்கப்படும் அமானி தங்கள் என்பதில் நான் முழு நம்பிக்கை கொண்டவன் என்று தெரிவித்துள்ளார்.

தேசிய காங்கிரஸின் உதவி செயலாளர் நாயகம் மற்றும் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவிகளிலிருந்து உத்தியோகப்பூர்வமாக விலகிக் கொள்வதற்கான கடிதத்தினை தேசிய காங்கிரஸின் தலைமையிடம் ஒப்படைத்து விட்டேன். இதுவும் ஒரு வகை அனுபவம்தான். ஆனாலும் தேசிய காங்கிரஸ் எமக்கான கட்சி என்பதால் அதன் அடிமட்ட தொண்டனாக இருந்து எனது பணியினை செய்து கொண்டேயிருப்பேன். கட்சிப் பணிகளில் எனது உழைப்பு எப்பொழுதும் தொடர்ந்து கொண்டேயிருக்கும். தலைமையின் வழிகாட்டலில் கட்சி உறுப்பினர்கள் அனைவருடனும் சேர்ந்து மிக உற்சாகமாகப் பயணிப்பேன். பதவிகள் மாத்திரம் ஓர் கட்சிக்கான விசுவாசத்தினை தீர்மானிப்பதில்லை என்பதினை இனிவரும் காலங்களில் செயற்படுத்த நினைக்கிறேன்.

இதுவரை காலமும் என்னுடன் கைகோர்த்து இக்கட்சி பணியில் களம் கண்ட உடன்பிறப்புக்களை மறவாது நெஞ்சில் இருத்திக் கொள்கிறேன். என்று தெரிவித்துள்ளார். கடந்த காலங்களில் பலரும் கட்சியை விட்டு விலகக் காரணம் இவருக்கு இவரது தந்தை வழங்கிய முன்னுரிமையே என்று பகிரங்க குற்றச்சாட்டு உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## “டீல் பேசி வந்த கைப்பிள்ளை”

வவுனியாவிற்கு சனிக்கிழமை (30) விஜயம் செய்த அவர், கட்சியின் மாவட்ட பொதுச்சபை கூட்டத்தில் கலந்து கொண்டு ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்,

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

அந்த காலத்தில் கைப்பிள்ளை ஒருவர் 40 ஆயிரம் சவப்பெட்டிகளைத் தயார் செய்யுங்கள். என்று பாராளுமன்றில் கூறினார். அந்த விடயம் சிங்கள மக்களிடத்திலும், ஆயுதம் தரித்தவர்கள் மத்தியிலும் ஒரு கொதிநிலையினை ஏற்படுத்தக்கூடியது. அவ்வாறு கூறிவிட்டு அவர் வெளிநாடு சென்றுவிட்டார்.

பின்னர் அந்த காலப்பகுதியில் பதவி வகித்த பாதுகாப்பு செயலாளர் மற்றும் ஜனாதிபதியுடன் டீல் பேசினார். தன்னிடம் பல ரகசியங்கள் இருக்கின்றன. அதனை நான் சொல்லுகிறேன் எனது சகோதரரை விடுவியுங்கள் என கோரினார். பின்னரே இலங்கை வந்தார் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அவர் வெளிநாடு செல்வதற்கு முன்பாக புலிகள் அமைப்பில் வாகனங்களுக்குப் பொறுப்பாக இருந்த குட்டி என்பவர் பாராளுமன்றில் அவருக்குக் கொடுத்த வாகனத்தைத் தருமாறு கேட்டிருந்தார். அதற்கு 40இலட்சம் ரூபாய் பணத்தினை பாராளுமன்றிற்கு செலுத்தினாலேயே அந்த வாகனத்தினை எடுக்க முடியும் என்று கைப்பிள்ளை கூற, குட்டி என்பவர் அந்த பணத்தினை அனுப்பியிருந்தார்.

அந்த பணத்தினையும் இவர் எடுத்துக்கொண்டு வாகனத்தினை பூட்டிவிட்ட பின்னரே வெளிநாடு சென்றார். பின்னர் மீண்டும் இங்கு வந்து மணற்தரை என்ற பகுதியில் காணி வாங்கி வீடு கட்டி வசதியாக இருக்கிறார். இவர்கள் மக்களுடைய நலன்களையும் கருத்தில் கொள்ளவேண்டும். இவ்வாறானவர்கள் மக்களுக்குத் தவறான வழிகாட்டுதல்களை வழங்கி. அவர்களை உசுப்பேற்றுகிறார்கள், இவை ஆரோக்கியமான விடயமல்ல என்றார்.

இதேநேரம் எங்களுக்குப் பயந்தே வெளிநாடு ஓடியதாக அண்மையில் அவர் கூறியிருந்தார். இன்று நான் இருக்கிறேன் ஆனால் அவர் யாருக்குப் பயந்து ஓடினாரோ அவர்கள் இல்லை. இன்று புலிகள் இல்லை நான் இருக்கின்றேன். அப்படியானால் யாருக்குப் பயந்து அவர் ஓடியிருக்க முடியும்.

அந்த காலகட்டத்தில் வெலிக்கடை சிறையில் சிங்கள காடையர்களாலும் களுத்துறை சிறையில் தமிழ் காடையர்களாலும் நான் தாக்கப்பட்டேன். ஆனால் நானும் திரும்பித் தாக்கினேனே தவிர நாட்டைவிட்டு ஓடவில்லை.

ஆனால், இந்த கைப்பிள்ளை திருகோணமலை மக்களை உசுப்பேற்றி குழப்பினார் அந்த மக்கள் அடித்துத் துரத்தியபோது ஓடியதை அனைவரும் பார்த்திருப்பீர்கள். கோழைபோல ஓடினார். அவர் திரும்பத் தாக்கியிருக்க வேண்டும். அந்த சம்பவத்திற்கு மனம் வருத்துகின்றேன். ஆனால் இவர் மீண்டும் தாக்கியிருக்கவேண்டும். அதற்கு முதுகெலும்பில்லாத தைரியம் இல்லாதவர்கள் இன்று சகட்டு மேனிக்கு ஏதோ பேசுகின்றனர்.

இவர்கள் இலங்கை நீதிமன்றங்களில் நம்பிக்கை இல்லை என்று கூறுகின்றனர். ஆனால் அவரது சகாக்கள் அனைவரும் இலங்கை நீதிமன்றங்களில் சத்திய பிரமாணம் எடுத்தபின்னரே மக்களைச் சுரண்டிக்கொண்டிருக்கின்றார்கள். நீதிமன்ற வழக்குகளில் பணம் இல்லாமல் அவர்கள் பேசுவதில்லை. மக்களிடம் பணம் இல்லை என்றால் அவர்கள் அணிந்திருக்கும் காதணியைக் கூட விடுகிறார்கள் இல்லை.

அண்மையில் கூட பணம் கொடுக்கவில்லை என்பதற்காக அடையாள அட்டையினை பறித்த அவரது முக்கிய சகா ஒருவரை நீதவான் எச்சரித்துள்ளார். எனவே இவர்கள் வெளியில் என்ன கதைக்கிறார்கள். கதைப்பது முழுக்க பொய் என்று தெரிவித்தார்.

## “கைகளை தூக்கிய 113 பேரும் பொறுப்புக் கூற வேண்டும்”

ஐக்கிய மக்கள் சக்தியே என்றும் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் இளம் உறுப்பினர்களில் ஒருவரான வைத்தியர் காவிந்த ஜயவர்தன உள்ளிட்ட கட்சியின் அனைத்து உறுப்பினர்களும் ஒன்றிணைந்து எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய தரப்பினரையும் ஒன்றிணைத்துக் கொண்டு நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்ததாகவும் சஜித் தெரிவித்தார்.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்போது, 113 பேர் ஆதரவாக வாக்களித்து சுகாதார அமைச்சரைப் பாதுகாத்த போது, ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 73 பேர் எதிராக வாக்களித்தனர் என்றும் இந்த ஊழல் மோசடிகள் அனைத்திற்கும் அப்போதைய சுகாதார அமைச்சர் மாத்திரமன்றி, பாராளுமன்றத்தில் அவரைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்த 113 பேரும் பொறுப்பாளிகள் என்றும் குறிப்பிட்டார்.

மேலும், கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு சார்பாக இருந்து அவருக்கு ஆதரவாக முன்னின்றவர்கள் யார் யார் என்பதைத் தேடிப் பார்க்குமாறு 220 இலட்சம் மக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டதாகவும், இந்த போலி மருந்து மோசடியில் இந்த 113 பேரும் ஈடுபட்டதாகவும், இதற்கு இவர்கள் அனைவருமே பொறுப்பேற்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித் திட்டத்தின் 58ஆவது கட்டமாக அநுராதபுரம் கலாவெவ முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு 10 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களை வழங்கும் நிகழ்வில் (29) கலந்து கொண்டு உரையாற்றும் போதே சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், திருட்டு மோசடிகளை மேற்கொள்ளச் சட்டங்களைக் கூட மாற்றிய அரசங்கம் இது. புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை ஊக்குவிப்பதாகக் கூறிக் கொண்டு, கொள்முதல் முறைகளைத் தவிர்த்து, அதே ஒப்பந்தங்களைத் தனது நட்பு வட்டார நண்பர்களுக்கு வழங்கும் சட்டங்களை தற்போதைய அரசாங்கமே நிறைவேற்றியுள்ளதாகவும், வங்குரோத்து நிலையில் உள்ள நாட்டிலும் கூட மோசடிகளும் திருட்டுகளும் இடம்பெற்று வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு சுட்டிக்காட்டினார்.

திருட்டு, மோசடிகளாலேயே அன்னிய நேரடி முதலீடு நாட்டுக்குக் கிடைக்காமைக்குப் பிரதான காரணமாகும்.

உண்மையான தலைவர்கள் என்றால், உண்மையிலேயே திறமையானவர்களாக இருந்தால், அன்னிய நேரடி முதலீட்டுக்களால் வளப்படுத்திக் கொள்ளும் இயலுமை பெற்றிருக்க வேண்டும் என்றும் நாட்டில் நடக்கும் திருட்டு, மோசடி, ஊழல், அரசியல் சந்தர்ப்பவாதங்களால் தான் அன்னிய நேரடி முதலீடு வருவதில்லை என்றும் மக்களுக்குச் சேவை செய்வதாகக் கூறிக்கொண்டு, தேர்தலில் வெற்றி பெற்று பாராளுமன்றம் வந்த பின்னர், தமக்குச் சாதகமாக சுய ஆதாயம் தேடும் நோக்கில் தவளைகள் போன்று பக்கம் மாறும் சந்தர்ப்பவாத கூத்தும் நடந்து வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

தகனமா, அடக்கமா என்ற விவகாரத்தில் கூட இதுவே நடந்ததாகவும், இந்தளவு சீரழிந்த அரசியல் கலாசாரமே நாட்டில் உள்ளதாகவும், நாம் எந்த அரசியல் கருத்தைக் கொண்டிருந்தாலும் ஒழுக்கமாகவும் நாகரீகமாகவும் இருக்க வேண்டும் என்றும் மேலும் சஜித் தெரிவித்தார்.

## துப்பாக்கிச் சூட்டில் சார்ஜன்ட் மரணம்

ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இரண்டு மணியளவில் பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்று வேனில் வெலிகம , ஜம்புரேகொட பிரதேசத்திற்கு வந்துள்ளதுடன், அந்த வேளையில் குழுவொன்று பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அங்கு சுடப்பட்ட சார்ஜென்ட் உயிரிழந்துள்ளதுடன் சப்-இன்ஸ்பெக்டரின் கால்களில் பல தோட்டாக்கள் தாக்கியுள்ளன. அவர் கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தென் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபரின் பணிப்புரையின் பிரகாரம் விசேட பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்று இது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

## உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரிப்பு

அதன்படி, பால் தேநீர் ஒன்றின் விலை 10 ரூபாவால் முதல் அதிகரிக்கப்படும் என சங்கத்தின் தலைவர் ஹர்சன ருக்ஷான் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

மேலும், சாதாரண தேநீரின் விலை 5 ரூபாவினாலும், சிற்றுண்டிகளின் விலை 10 ரூபாவினாலும், சோறு மற்றும் கொத்து ரொட்டியின் விலை 25 ரூபாவினாலும் அதிகரிக்கப்படுமென அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

## “போராட்டங்களை நசுக்க முடியாது”

அம்பாறை திருக்கோவில் பிரதேசம் தம்பிலுவில் பொது சந்தைக்கு முன்பாக சங்கத்தின் தலைவி தம்பிராசா செல்வராணியின் தலைமையில் இடம்பெற்ற கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில்போதே இவ்வாறு தெரிவித்து இருந்தனர்.

அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் இன்று திருக்கோவில் பிரதேசத்தில் கறுப்புக் கொடிகளை ஏந்தியவாறு இலங்கை அரசுக்கு எதிரான கோசங்களை எழுப்பி தமது ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்து இருந்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் 50க்கு மேற்பட்ட தாய்மார்கள் மற்றும் பெண்கள் கலந்து கொண்டு இருந்தனர்.

# HAPPY New Year 2024

## ஜனாதிபதியின் வாழ்த்துச் செய்தி

# “சவால்களைப் புரிந்துகொள்ள வேண்டும்”

பல சவால்களுக்கும் எதிர்பார்ப்புக்களுக்கும் மத்தியிலேயே நாம் 2024 புது வருடத்தை ஆரம்பிக்கிறோம். ஆயிரக்கணக்கிலான எண்ணங்களைப் பூர்த்தி செய்துகொள்ள, நம் நாடு தற்போது எதிர்கொண்டிருக்கும் நெருக்கடிகளில் இருந்து நாட்டை மீட்டெடுக்க வேண்டியது அவசியம் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது புத்தாண்டு வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், கடந்த காலங்களில் நீங்கள் செய்த அர்ப்பணிப்புக்கள் மற்றும் துயரங்களைத் தாங்கிக் கொண்ட தன் பலனாக நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்பதற்கான அடிப்படைக் கட்டமைப்பை உருவாக்க முடிந்துள்ளது.



இருப்பினும், பொருளாதார ஸ்திரத்தன்மைக்காக, அதே பாதையில் தொடர்ந்து பயணிக்க வேண்டியது அவசியமாகும். அது மலர் பாதையாக இல்லாமல், முட்களும், கற்களும் நிறைந்த பாதையாகவே அமைந்திருக்கும். இதனால், இலங்கை மீளக் கட்டியெழுப்பும்போது, எதிர்கொள்ளும் சவால்களைப் புரிந்துகொள்ள வேண்டியது இலங்கையராகிய எமது பொறுப்பாகும்.

ஜனவரி மாதத்திற்கு “ஜேனஸ்” எனும் கடவுளின் பெயர் சூட்டப்பட்டது. அக்கடவுளினால் முன்னோக்கி மாத்திரம் அன்றி, பின்னோக்கியும் பார்க்க முடியுமாம். எதிர்காலம் தொடர்பில் மட்டுமன்றி, கடந்த காலம் தொடர்பிலும் அறிந்து, ஒவ்வொருவரினதும் சவால்களைப் புரிந்துகொள்ள வேண்டும். நாட்டின் முன்னேற்றத்துக்காக எமது பொறுப்புக்களை அறிந்து கொள்வோம். அவற்றை செயற்படுத்தி, தாய் நாட்டை பலப்படுத்துவோம். அதற்காக அர்பணிப்புடனும் செயற்படுவோம். அதனால் புத்தாண்டை செழிப்பானதாக மாற்றிக்கொள்வோம். பிறந்திருக்கும் இந்த ஆண்டு, அனைவருக்கும் வெற்றிகரமான ஆண்டாக அமைய வாழ்த்துகள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## எதிர்க்கட்சித் தலைவரின் வாழ்த்து

# “புதிய தேர்தலுக்கு வழி வகுப்பதே முதன்மை”

முறையாக மக்கள் ஆணையைப் பெற்ற அரசாங்கத்தை உருவாக்கினால் அன்றி, தற்போதைய குழப்பமான மற்றும் நம்பிக்கையற்ற இருள் சூழ்ந்த காலத்தை முடிவுக்குக் கொண்டுவர முடியாது. எனவே, அடுத்த ஆண்டு புதிய தேர்தலுக்கு வழி வகுப்பதே முதன்மையான போராட்டமாக இருக்க வேண்டும் என எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நாடு பல பாரிய பொருளாதார மற்றும் அரசியல் இடர்களை எதிர்நோக்கி வரும் இத்தருணத்தில், நாட்டு மக்களின் சாதாரண வாழ்க்கை நிலைமைகளில் கூட பல அசாதாரண சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளன.



விவசாயம் மற்றும் தொழில் முயற்சியாளர் சார்ந்த தன்னிறைவு பொருளாதார முறை தற்போதைய அரசாங்கத்தின் தொலைநோக்கு அற்ற நடவடிக்கைகளால் முற்றிலும் தலைகீழாக மாறியுள்ளது. இந்நிலை மாற வேண்டுமானால், ஆட்சியாளர்களின் நன்மைகளைப் பற்றிச் சிந்திக்காமல் மக்களைப் பற்றிச் சிந்திக்கும் ஆட்சி முறையே நாட்டுக்குத் தேவை.

அத்துடன், மக்களை ஒடுக்கி, வரிக்கு வரி விதித்து, மக்களின் வாழ்வை அழிக்கும் வகையில் அரசு செயல்பட்டுள்ள இந்த தருணத்தில், நாம் மீண்டும் ஒரு நாடாக ஒன்றிணைய வேண்டும்.

நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் பல தேர்தல்கள் நடைபெறவுள்ள. இந்தப் புத்தாண்டிலாவது மக்கள் தங்கள் அபிலாஷைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதே எனது பிரார்த்தனையாகும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## வடிவேல் சுரேஷின் வாழ்த்து செய்தி

# “அரசியல் ரீதியில் புதிய மாற்றங்கள் ஏற்படும்”

கடந்த கால பின்னடைவுகளிலிருந்து நம் நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல அனைவரும் ஒன்றிணைந்த செயல்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசருமான வடிவேல் சுரேஷ் தனது புத்தாண்டு வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நல்லிணக்கத்தோடும் சமத்துவத்தோடும் மலர்ந்திருக்கும் 2024ஆம் ஆண்டு புத்தாண்டு அரசியல் ரீதியில் பல திருப்பங்களும் புதிய மாற்றங்களும் அமைந்தாக காணப்படும்.

கடந்த கால பின்னடைவுகளிலிருந்து நம் நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்பதோடு, பெருந்தொட்ட மலையக மக்களின் அனைத்து உரிமைகளையும் கிடைக்கப் பெற்று அனைவருக்கும் எல்லா நலங்களும் வளங்களும் கிடைக்கக்கூடிய ஆண்டாக இவ்வாண்டு அமைய வேண்டும் என்று வாழ்த்துகின்றேன் எனவும் குறிப்பிட் டுள்ளார்.



## ரமேஸ்வரனின் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி

# “பிறக்கும் புத்தாண்டில் உறுதி கொள்வோம்”

பிறக்கும் புத்தாண்டு இலங்கை மக்களுக்கு சம உரிமையையும் சம அந்தஸ்தையும் வழங்கி நாட்டு மக்கள் அனைவருக்கும் சிறந்த வாழ்க்கை சூழலை ஏற்படுத்தும் ஆண்டாக அமைய வேண்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ரமேஸ்வரன் விடுத்துள்ள புது வருட வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், பஞ்சம், பசி, பட்டினி என்பவற்றிற்கு விடிவு தேடி புதிய வாழ்வின் ஏக்கங்களைக் கண்களில் சுமந்து இலங்கை வந்து குடியேறிய இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் உழைப்பை மட்டுமே மூலதனமாகக் கொண்டு வாழ்வின் இருள் நீக்கி ஒளி பெற்ற ஒரு பெரும் சமுதாயமாக, வரலாற்று மாற்றத்துடன் வாழ்ந்து வருகின்றார்கள். இந்நாட்டின் சகல முன்னேற்றத்திற்கும் இந்திய வம்சாவளி மக்கள் தமது பங்களிப்பினை பெருமளவிலே செலுத்தி வருவதுடன், இந்நாட்டின் பொருளாதாரத்திற்கும் முதுகெலும்பாக இருந்து வருகின்றார்கள். எந்தவொரு காலகட்டத்திலும் இந்நாட்டுக்கு உழைப்பாளிகளாக இருந்திருக்கின்றார்களே தவிர இந்த நாட்டுக்கு எந்தவிதமான பாதகத்தையும் ஏற்படுத்தியதில்லை.



இவர்கள் இதுவரையிலும் அனைத்து உரிமைகளையும் பேரம் பேசும் சக்திகளினால்தான் பெற்றிருக்கின்றார்கள். எனவே இந்த புதிய வருடத்தில் சகல உரிமைகளுடன் வாழ்வதற்கும் அதேபோல மக்கள் வாழ்க்கையில் இவர்களின் நியாயமான கோரிக்கைகளை அனைவரும் நிறைவேற்றுவதற்கு ஒன்றிணைந்து உழைப்போம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.



# பல கிராமங்கள் நீரில் மூழ்கின

■ பாறுக் ஷிஹான்

அம்பாறை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாகப் பெய்துவரும் அடைமழை காரணமாக நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கல்லோயா குடியேற்றக் கிராமங்களையும் கல்முனை நகரையும் இணைக்கும் கிட்டங்கி வீதியின் மேலாக வெள்ள நீர் பரவ ஆரம்பித்துள்ளதுடன், இவ்வீதியூடாக போக்குவரத்து மேற்கொள்வதில் பிரதேச மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தினமும் விவசாயிகள், அலுவலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பலர் நாளாந்தம் பயணிக்கும் இவ்வீதியில், வெள்ள நீர் பரவி வருவதால் கல்லோயா குடியேற்றக் கிராமங்களிலுள்ள சவளக்கடை அன்னமலை, சொறிக்கல்முனை, 4ஆம், 5ஆம், 6ஆம், 12ஆம் கொளனிகள், நாவிதன்வெளி போன்ற பிரதேச மக்கள் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் தமது அன்றாட பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வீதிக்கான நிரந்தர பாலம் அமைக்குமாறு நீண்டகாலமாகப் பிரதேச மக்களினால் விடுக்கப்படும் கோரிக்கை அரசாங்கத்தினால் நிறைவேற்றப்படவில்லை என குறித்த பகுதி மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, மழை நீர் தேங்கி நிற்பதனால் நெற் பயிர்கள் அழுகும் நிலைக்குள்ளாகியுள்ளதாகப் பிரதேச விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

## தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு

# விவசாய உபகரணங்கள் வழங்கி வைப்பு

■ ஏ.எச்.ஹஸ்பர்

கிண்ணியா பிரதேச செயலகப் பகுதியில் உள்ள தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான விவசாய உற்பத்தி மூலம் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் “முஸ்லிம் எய்ட்” அமைப்பினால் விவசாய உபகரணங்கள் (29) வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கிண்ணியா பிரதேச செயலக பிரிவில் மேற்கொள்ளப்பட்டுவரும் விவசாய வாழ்வாதார திட்டத்தின் ஒரு பகுதியாக உள்ளூரில் உற்பத்தியாகும் விவசாய உற்பத்தியை மூலப்பொருளாகக் கொண்டு “விவசாய பெறுமதி சேர்த்தல் உற்பத்தி” தொழில் முயற்சியாளர்களுக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கிண்ணியா பிரதேச செயலகத்தில் கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.கனி தலைமையில் நடைபெற்றுள்ளது.







இந்நிகழ்வில், சூரங்கள், மஹறு கிராம, கச்சக்கொடித்தீவு, பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்ட “விவசாய பெறுமதி சேர்த்தல் உற்பத்தி” பெண் தொழில் முயற்சியாளர்களுக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதில், திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராச்சி, பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு வழங்கி வைத்தார். இவ்வருடம் சுமார் 18 மில்லியன் பெறுமதியான வாழ்வாதார திட்ட உள்ளீடுகள் கிண்ணியா பிரதேச செயலக பிரிவில் முஸ்லிம் எயிட் ஊடாக வழங்க ப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


# கம்பஹா பிரதேச சபை

## வாடகை அடிப்படையில் டபல் கெப் ரக வண்டியை பெற்றுக்கொள்வதற்கான விலைமனுக் கோரல்

## கொள்முதல் இலக்கம் – DS/06/2023

கம்பஹா பிரதேச சபை அலுவலக வேலைகளுக்காக 2024.01.01 ஆம் திகதி முதல் 2024.06.30 ஆம் திகதி வரை 4WD வகையான டபல் கெப் வண்டி வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு அனுமதிபெற்ற வழங்குனர்களிடம் இருந்து விலைமனு கோரப்படுகின்றன.

02.அது சம்பந்தமான விபரங்களை www.gampha.ps.gov.lk என்ற கம்பஹா பிரதேச சபை இனைய தளத்தில் அனுகுவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

03.குறிப்பிடப்பட்ட வாடகை வண்டியானது கீழே குறிப்பிடப்பட்டுள்ள தரத்தில் இருத்தல் வேண்டும்.

- 2015 – 2020 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட உற்பத்தி செய்யப்பட்ட 2450 CC – 3000 CC இடையே எஞ்சின் திறன் கொண்ட உலகப் புகழ்பெற்ற வர்த்தக நாமம் உடைய மாடலாக இருத்தல் வேண்டும்.

04. 2023.12.30 ஆம் திகதி முதல் 2024.01.16 ஆம் திகதி வரை மு.ப 09.00 மணி முதல் பி.ப 03.00 மணி வரையுள்ள காலப்பகுதியில் மீள் வழங்கப்படாத ரூ. 1000.00 (ஆயிரம் ரூபாய்) கட்டணத்தை பணமாக செலுத்தி விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் மூலம் அபிவிருத்திப் பிரிவிலிருந்து ஏல ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம் மேலும் மேலதிக விபரங்களுக்கு 033-2220145 என்ற தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

05. ஏலப் பாதுகாப்பு தொகையாக ரூ. 25,000.00 (இருபத்தைந்தாயிரம் ரூபா) வை கம்பஹா பிரதேச சபையில் வைப்புச் செய்யப்பட்டு மேற்படி ரசீதுகள் சீல் செய்யப்பட்ட விலைப்பத்திரங்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

06. ஏலங்கள் அசல் மற்றும் நகல் ஆக தயார்செய்து 2024.01.17 ஆம் திகதி அன்று மு.ப 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்பாக கிடைக்கக்கூடியவாறு “பிரதேச சபையின் செயலாளர் மற்றும் கம்பஹா பிரதேச சபையின் அதிகாரங்கள் மற்றும் கடமைகளை அமுல்படுத்தும் அதிகாரி, கம்பஹா பிரதேச சபை, மிரிஸ்வத்தை, முதுன்கொட” என்ற முகவரிக்கு பதிவு தபால் மூலம் அனுப்பிவைத்தல் அல்லது கம்பஹா பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் இடவும். அசல் மற்றும் நகல் கடிதவுறையில் இட்டு கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் “வாடகை அடிப்படையில் டபல் கெப் ரக வண்டி பெற்றுக்கொள்வதற்கான விலைமனு கோரல்” என குறிப்பிடப்பட வேண்டும். தாமதமாக கிடைக்கப்பெறும் விலை மனுக்கள் கிராகரிக்கப்படும். விலை மனுக் கோரல்கள் பெற்றுக்கொள்ளும் இறுதி நேரம் முடிவடைந்தவுடன் கம்பஹா பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் வருகைத்தந்திருக்கும் ஏலதாரர்கள் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் விண்ணப்பங்கள் திறக்கப்படும்.

07. இந்த ஏலங்களை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் உள்ளூராட்சி மன்றத்தின் கொள்முதல் குழுவிடம் உள்ளது.

**எஸ்.ஏ.என்.பீ. சுரவீர**
**பிரதேச சபையின் செயலாளர் மற்றும் கம்பஹா பிரதேச சபையின் அதிகாரங்கள், கடமைகளை நடைமுறைப்படுத்தும் அதிகாரி**
**கம்பஹா பிரதேச சபை, மிரிஸ்வத்த, முதுன்கொட.**
**2023.12.29**

# கடினமான காலகட்டத்தை கடக்க வேண்டியுள்ளது

இந்நாட்டு மக்கள் மிகவும் கடினமான காலகட்டத்தை கடக்க வேண்டியுள்ளது. பண்டிகை உற்சாகத்தை கொன்றுவிட்டு, பொருளாதார வானவேடிக்கைகள் தோன்றியுள்ளன. ஒருபுறம், கொவிட் இன் புதிய பிறழ்வு பற்றிய ஆபத்தான செய்திகள் உள்ளன. மறுபுறம், டெங்கு நுளம்புகள், மக்களின் வாழ்க்கையைப் பிடியில் எடுக்க முயல்கிறது

டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். யாழ். பல்கலைக்கழக கலைப் பீடத்தில் மூன்றாம் ஆண்டில் கல்வி கற்கும் குணரட்னம் சுகிதா என்ற மாணவியே உயிரிழந்துள்ளார்.

புள்ளிவிவரங்களில் இருந்து வரும் அறிகுறிகள் நன்றாக இல்லை. 2023ஆம் வருடம் ஜனவரி 1ஆம் திகதி முதல் டிசெம்பர் 26ஆம் திகதி வரையில் 85,619 டெங்கு நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர். இதில் 50 பேர் உயிரிழந்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இந்த புள்ளி விவரங்களிலிருந்து மரணம் நம் தலைக்கு மேல் கடும் அபாயத்தில் இருக்கின்றது.

ஒருபுறம், நமது சுகாதார சேவை மிகவும் மோசமான நிலையில் உள்ளது. ஒருபுறம், போதிய மருந்து இல்லை. மருத்துவ உபகரணங்கள் இல்லை. தரம் தாழ்ந்த மருந்துகள் கோடி, கோடி செலவில் இறக்குமதி செய்யப்பட்டு, இறக்குமதி செய்வதாகக் கூறி, இந்த நாட்டில் தட்டுக் கொட்டகைகளில் தயாரிக்கப்படுகின்றன. கடத்தல் மாஃபியாக்களின் கூடாரமாக சுகாதாரத்துறை மாறியுள்ளது. தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்த சந்தேகத்தின் பேரில் சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் உட்பட பலர் சிறையில் உள்ளனர்.

இந்தச் சூழலில் 'நோய்வாய்' இருப்பது மன்னிக்க முடியாத பாவம். ஆனால் அதற்கு டெங்கு வைரஸ் காரணமல்ல. எமது சுற்றுப்புறங்கள் அசுத்தமாக இருப்பதால் டெங்கு கொசுக்கள் பெருகுகின்றன. சுற்றுப்புறங்களில் இருந்து தப்பித்து வீட்டிற்குள் நுழைந்து அழிவை ஏற்படுத்தக் காத்திருக்கின்றன.

மழைக்குப் பிறகு ஒரு தொற்றுநோய் சூழ்நிலை உருவாகலாம் என்பதைப் புரிந்து கொள்ள ஒரு மேதை தேவையில்லை. ஆனால், விபத்து குறித்து அதிகாரிகள் போதிய நடவடிக்கை எடுத்தார்களா? என்று கேட்க வேண்டும். மக்களும் தங்களுக்கு வரப்போகும் ஆபத்து குறித்து தனிக்கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை. இதன் விளைவாக அழிவின் சதுப்பு நிலம் விரிவடைந்தது.

இந்த கொடிய ஆபத்தில் இருந்து உங்களை மட்டும் காப்பாற்ற முடியும் என்று நீங்கள் நினைத்தால் அது பெரிய தவறு. ஆனால் சிலர் அப்படி நினைக்கிறார்கள். வீடு, தோட்டத்தை மட்டும் சுத்தம் செய்து, தகர டப்பா உள்ளிட்ட குப்பைகளைப் பக்கத்துத் தோட்டத்தில் வீசுகின்றனர். இல்லை என்றால் நெடுஞ்சாலையில் போடுவார்கள். அதன் மூலம் தங்கள் குழந்தைகளின் உயிரும், தாங்களும் பாதுகாக்கப்படும் என்று நினைக்கிறார்கள்.

டெங்கு நுளம்பு உட்பட அனைத்து தொற்றுநோய்களுக்கும் எதிராக ஒரு சிறந்த நடவடிக்கையை அணிதிரட்ட வேண்டிய முக்கியமான நேரம் இது. புரியவில்லையென்றால் கல்லறையை நோக்கி அணிவகுத்துச் செல்வீர்கள்.




## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

## வாழ்வியல் தரிசனம்

இருவர் தங்களுக்குள் பேசியபடி சென்றார்கள். அவர்களில் ஒருவர், ஊரில் யாரோ இளைஞர்கள் சண்டை செய்ததாகச் சொன்னார்.

எங்கு நடந்தது என்பது பற்றிப் பேசாமல் சென்று கொண்டிருந்தனர்.

இதைக் கேட்ட வீதியின் அருகே நின்றிருந்தவர், "என்ன எங்கள் ஊரில் சண்டையா" எனக் கேட்டுவிட்டு, உடனே ஊருக்குள் சென்று, தனது கற்பனைகளையும் சேர்த்து, வாய், மூக்கு, வால் என்பவற்றைக் சேர்த்து, அங்குள்ள ஒருவருக்குச் சொல்ல, அவரும் அதற்கு மேலும் பல கதைகளைச் சோடித்துச் சொல்ல, ஊர்ச் சனங்களும் ஆவேசத்துடன் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு, அவர்களைத் தேடிச் சென்றார்கள்.

ஊரே பரபரப்படைந்தது.

முடிவில் அங்கு ஒன்றுமே நடக்கவில்லை என்பதை அறிந்து, "யாரடா இதைச் சொன்னது" எனக் கேட்க, கதையைக் கட்டியவர்கள் ஒளித்துத் தப்பித்து விட்டார்கள்த த்தமது காரியங்களைச் செய்தால், வீணான சிந்தனைகள் புறப்படாது. கலவரங்கள் எல்லாமே வதந்திகளால்த் தான் உருவாகின்றன. யுத்தங்கள் கூட!

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### கிராமங்களுக்கான பேருந்து சேவையை கோரும் மக்கள்

முல்லைத்தீவு- துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவு கிராமங்களுக்கு துணுக்காயில் இருந்து பேருந்துகள் இயங்குவதற்கான வழிகளை முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் மேற்கொள்ள வேண்டும் என போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

2009 போர் நிறைவுக்கு வந்த பின்னர், நலன்புரி முகாம்களிலிருந்து முல்லைத்தீவு -துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவின் கிராமங்களிலேயே மீள் குடியேற்றம் நடைபெற்றது. இதன்போது, மல்லாவியில் இருந்து இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துகள் பணியில் ஈடுபட்டன. ஒரு வருடத்திலேயே சகல பேருந்து சேவைகளும் இடை நிறுத்தப்பட்டன.

இதனால் துணுக்காயின் ஆலங்குளம், உயிலங்குளம், தென்னியங்குளம், கோட்டைக்கட்டியகுளம், அம்பலப்பெருமாள்குளம், அமதிபுரம், ஆரோக்கியபுரம், தேராங்கண்டல், ஐயன்கன்குளம், பழையமுறிகண்டி, புத்துவெட்டுவான் ஆகிய கிராமங்களின் மக்கள் கடந்த 12 ஆண்டுகளுக்கு மேலாகப் பேருந்துகள் பணியில் ஈடுபடாததன் காரணமாகப் போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர்.

இது தொடர்பாகப் பல தடவைகள் ஆராயப்பட்டபோதிலும், பேருந்து சேவைகள் நடைபெறவில்லை.

இந்நிலையில், இலங்கை போக்குவரத்து சபையின் முல்லைத்தீவு கிளையினரால் துணுக்காய் பேருந்து நிலையத்திலிருந்து கிராமங்களுக்கான பேருந்து சேவைகளை தொடர்ந்து நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

- நடராசா கிருஸ்ணகுமார்

லக்ஸ்மன்

# தமிழ்த் தேசியமும் தமிழரசுக் கட்சியின் தலைமையும்

தமிழ்த் தேசிய அரசியலானது தமிழர்களுடைய அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்காகவேயன்றி, ஒரு அரசியல் கட்சியின், தனிப்பட்ட அரசியல்வாதிகளின் நலன் பேணுவதற்கானல்ல என்பதுடன் அவ்வாறானதாக இருக்கக்கூடாது என்பது அடிப்படை.

தேர்தல்கள் வரும்போதும் ஆண்டுகள் பிறக்கும்போதும் வாக்குறுதிகள் பறக்க விடப்படுவதும் உறுதிகள் வழங்கப்படுவதும் தேசிய அரசியலிலும், தமிழர்களுடைய அரசியலிலும் புதிய விடயமல்ல. ஆனாலும், இந்த 2024இல் தமிழர்களின் அரசியல் விடுதலைக்கான சுயநிர்ணய போராட்டத்திற்குச் சிறப்பானதொரு முடிவினை தருகின்ற ஆண்டாக இருக்கவேண்டும் என்று மாத்திரமே எதிர்பார்க்க முடிகிறது. ஏனெனில் எதிர்பார்ப்புகளுடனேயே வருடங்களைக் கடக்க வேண்டியதாகிப்போனது.

வடக்கு, கிழக்கு தமிழர்களின் அரசியல் உரிமைக்கான போராட்ட வரலாறு ஆயுதப் போராட்டத்துடன் முடிவுக்கு வந்துவிட்டதா என்று எல்லோரும் சந்தேகம் கொள்ளும் அளவுக்கான செயற்பாடுகளே அரசியல் கட்சிகளால் முன்னெடுக்கப்படுகின்றன.

ஜனநாயக உரிமையைப் பெற்றுக் கொள்வதில் காலத்துக்குக் காலம் முன்னெடுக்கப்பட்ட போராட்ட முறைகள் மாற்றம் பெற்று ஜனநாயக வழி சாத்தியமற்றது என்ற முடிவின் பலனாகவே ஆயுதப் போராட்ட இயக்கங்கள் தோற்றம் பெற்றன. இந்தியாவினுடைய உள்வருகையுடன் நடைபெற்ற திம்பு பேச்சுவார்த்தை, இதனையடுத்து, ஏற்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தம் காரணமாகப் போராட்ட இயக்கங்கள் பல அரசியல் கட்சிகளாக மாறிப் போயின. ஆனால், தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுதப் போராட்டத்தைக் கைவிடாக் கொள்கையை தொடர்ந்தும் கடைப்பிடித்தனர். ஆனாலும், 2009 மே மாதம் அதனையும் மௌனிக்கச் செய்த மாதமாகப் போனது.

தமிழர்களுடைய அரசியல் உரிமைக்கான பிரச்சினை இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து இதுவரையில் தீர்வை எட்டுவதற்கு முடியாததாகவே தொடர்கிறது. இலங்கை அரசியலமைப்பின் 22 திருத்தங்களில் எதுவும் தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாஷையை நிறைவேற்றவில்லை. அவற்றில் 13ஆவது திருத்தம் தவிர ஏனையவை இனப்பிரச்சினை கூர்மையடையவே வழி செய்திருக்கின்றன. 1987 இந்திய - இலங்கை அரசாங்கங்களுக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் ஊடாக ஏற்படுத்தப்பட்ட 13ஆவது திருத்தம் நாட்டின் அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தாலும் அது இதுவரையில் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இலங்கை அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வாக இல்லாது விட்டாலும் ஒரு ஆரம்பப்புள்ளியாக எடுத்துக் கொள்ளப்பட்டு நிரந்தரத் தீர்வுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று தற்போதும் கோரிக்கைகள் விடுக்கப்பட்ட வண்ணமுள்ளன. ஆனாலும், அதற்கு எதிராகச் செயற்படுபவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

13ஆவது திருத்தச் சட்டம் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் மூலமாக ஏற்பட்டிருந்தாலும் அதனைக்கூட இலங்கையின் ஆளும் அரசாங்கங்கள் மற்றும் பெரும்பான்மைச் சமூகம் முழுமையாக அமுல்படுத்துவதற்கான மனநிலையற்றவர்களாகவே இருக்கின்றனர்.

பல்வேறு கருத்துக்கள் காணப்பட்டாலும் கடந்த கால கசப்புணர்வுகள், முரண்பாடுகளை மறந்து தமிழ் மக்களின் அரசியலை முன்னெடுப்பதற்காகத் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவரால் 2001ஆம் ஆண்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. தமிழர்களின் ஏகோபித்த அரசியல் தரப்பாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்திலேயே அம்முயற்சி மேற்கொள்ளப்பட்டிருந்தது. தமிழ் மக்களுடைய அரசியல் நிலைப்பாடுகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்கொண்டு செல்லும் என்ற நம்பிக்கை அக்காலத்தில் அனைத்துத் தரப்பினரிடமும் பலமாக இருந்தது. ஆனால், கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக 2009 மே 18க்குப் பின்னர் ஒவ்வொரு கட்சியாகக் கழன்று இப்போது சின்னத்தை வழங்கியிருந்த தமிழரசுக்கட்சி கடந்த வருடத்தில் தனித்துச் செயற்படும் முடிவை எடுத்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்டு முதல் தேர்தலின் பின்னர் தமிழர் விடுதலைக்கூட்டணியின் உதய சூரியன் சின்னம் இல்லை என்றானது. அதன் பின்னர், கடந்த வருடத்தில் தமிழரசுக்கட்சியின் வீட்டுச் சின்னம் எடுத்துச் செல்லப்பட்டதால், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் குத்துவிளக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சின்னமாக இருக்கும் என்று அறிவிக்கப்பட்டது. இருந்தாலும் இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பென்ற ஒன்று இருக்கிறதா என்று வினவ வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

தந்தை செல்வாவினால் தமிழரசுக் கட்சி கிடப்பில் போடப்பட்டே தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாக்கப்பட்டது. அதன்படி, இயக்கமின்றி இருந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சின்னமாக்கப்பட்டது என்பதே உண்மை. அது தமிழர்களின் அரசியல் சின்னமாக இருக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரும் அரசியல் கட்சியாக இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருந்த போதிலும், தமிழரசுக் கட்சியின் ஏகாதிபத்திய, மேட்டுக்குடி நிலைப்பாடு காரணமாகக் கூட்டாக இருந்த கட்சிகள் பல வெளியேறும் நிலை ஏற்பட்டிருந்தது. இதனை யாரும் மறுப்பதற்கில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் பயனற்றுப்போனதும் அதற்குக் காரணம் எனலாம்.

தமிழர்களின் அரசியலைப் பலவேறு கட்சிகளாகி, தனித்து நின்று மேற்கொள்ள முடியாது என்பதனைப் புரிந்து கொண்டமையினால் உருவான கூட்டமைப்பு சிதைந்து போயிருக்கின்றது. ஆனாலும், தமிழ்த் தேசிய நலனைக் கருத்தில் கொள்ளாத அரசியலை நடத்துவதில் பயன் ஏதும் விளையாதென்பது புரிந்து கொள்ளப்படவில்லை. இருந்தாலும், தமிழ்த் தேசிய நலனும், அதன் நிலைப்பாடும் மாற்றமுறா வகையில் அரசியல் பயணம் தேவையாக இருக்கிறது என்ற கோரிக்கை இருந்து கொண்டே இருக்கிறது.

வடக்கு, கிழக்கு தமிழர்களுடைய அரசியல் வரலாறென்பது கொள்ளை ரீதியாகவும், கோட்பாடு மற்றும் நிலைப்பாடு ரீதியாகவும் சீராகக் கட்டமைக்கப்பட்டது. அவ்வாறே இதுவரை காலமும் முன்கொண்டு செல்லப்பட்டிருக்கிறது எனக் கொண்டால் அதனை வழிப்படுத்துவதற்கான அரசியல் சரியான முறையில் இனிவரும் காலங்களிலும் செய்யப்பட்டாக வேண்டும். அந்த ஒழுங்கில்தான், தமிழர்களுடைய உரிமைகளுக்கான, அவர்களுடைய கோரிக்கைகளுக்கான அரசியலை தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் செய்கின்றனவா என்ற கேள்வி தோன்றும். அவ்வாறில்லையானால், தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் தங்களை இந்த வரன் முறைகளுடன் முன் நகர்த்த வேண்டியது காலத்தில் கட்டாயமாகும்.

தமிழ் மக்களின் இன முரண்பாட்டுச் சிக்கல் தோற்றம் பெற்றமை முதல் பேரினவாதிகளுடன் கொள்கை ரீதியான பல விடயங்களில் உடன்பாடுகள், இணக்கப்பாடுகள் எட்டப்பட்டிருந்தாலும் ஒப்பந்தங்கள், பேச்சுவார்த்தைகளின் ஊடாக இதுவரையில் சீர்படுத்தப்படவில்லை என்பதே வரலாறு. ஆனால், தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டதும், ஏமாந்ததும் காலங்காலமாக நடைபெற்று வந்திருக்கிறது.

ஆயுத யுத்தம் மௌனிக்கச் செய்யப்பட்டுவிட்டது. அதனால் தமிழர்கள் தங்கள் போராட்டத்தை இராஜதந்திர ரீதியில் முன் நகர்த்தவேண்டிய கட்டாயத்துக்குப்படுத்தப்பட்டனர். ஆனால், அதனை யார் சரியாகச் செய்கிறார்கள் மக்கள் புரிந்து கொண்டிருக்கிறார்களா என்பது சந்தேகம். ஏனெனில் அரசியலைத் தமிழ் மக்கள் வெறுக்கும் அல்லது வேறு நிலைப்பாடுகளுக்குள் உள்வாங்கப்படுகின்ற நிலைமை உருவாகி வருகிறது. இதற்கு தமிழர்களின் அரசியல் தரப்பினரே பொறுப்பாகவேண்டும்.

தமிழ் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழரசுக்கட்சி என மிதவாத அரசியலுடனும், ரெலோ, புளொட், ஈரோஸ், ஈ.பி.ஆர்எல்எவ், ஈ.என்.டி.எல்.எவ். என ஆயுத அரசியலுடனும் என தொடர்ந்த தமிழர்களுடைய விடுதலைக்கான முயற்சிகள் பலனற்றுப் போனதாகவே இருக்கின்றன என்றே சொல்லவேண்டும்.

இந்த இடத்தில்தான் தமிழர்களுடைய அரசியலை மக்களது அரசியலுரிமைக்கான அரசியலை யார் முன்கொண்டு செல்வது. சுயநலன்களுக்கு அப்பால், மக்களை அரசியல் மயப்படுத்துவதன் ஊடாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற செயற்திட்டம் முன்னிற்கிறது. பூனைக் கண்ணை மூடிக்கொண்டிருப்பது பயனற்றதே.

அந்தவகையில், தமிழர் அரசியலில் வெறுப்பு அரசியலை மேற்கொள்ளும் நிலைப்பாட்டிலிருந்து தமிழர் அரசியல் தரப்பினர் விடுபட்டு ஒன்றிணைந்த தமிழ்த் தேசிய அரசியல் உருவாவதற்கான வழிவகைகள் ஏற்படுத்த வேண்டும்.

அதன் ஒரு படியாக, தமிழரசுக்கட்சியின் புதிய தலைவர் தெரிவு வெறுமனே, சர்வதேச தொடர்புகளைக் கொண்ட, மொழி அறிவு என்பவைகளுக்கப்பால், தமிழ் மக்களின் அரசியலுரிமைகளை வென்றெடுப்பதற்காகச் சுயநலம் மறந்து ஒன்றிணைந்த அரசியலுக்கான, தமிழர்களை ஒன்றிணைப்பதாகத் தமிழ்த் தேசியத்தின் பாற்பட்டதாக இருக்கவேண்டும்.

# சுவ திவிய நிறுவனத்தின் முதலாவது பொது நிகழ்ச்சித்திட்டம் நிறைவேற்றம்






நீரிழிவு நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட இலாப நோக்கற்ற நிறுவனமான *Suva Diviya* நிறுவனம், இலங்கை அறக்கட்டளை நிறுவனத்தினால் *"Unmask Diabetes"* என்ற தொனிப்பொருளின் கீழ் ஒரு சிறப்பு பொது நிகழ்ச்சியை நடத்தியது, இதில் 300க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். நீரிழிவு நோயைத் தடுப்பதற்கும் நிர்வகிப்பதற்கும் முன்கூட்டியே நடவடிக்கை எடுப்பதில் கவனம் செலுத்துவதே திட்டத்தின் நோக்கமாகும்.

இலங்கையில் நீரிழிவு நோய் பாரிய பிரச்சினையாக மாறியுள்ளது. நான்கு பேரில் ஒருவருக்கு நீரிழிவு நோய் உள்ளது, அத்துடன், 30% பேருக்கு நீரிழிவு நோய்க்கு முந்தைய அபாயம் உள்ளது. நகரத்தில் வசிக்கும் இளைஞர்களிடையே நீரிழிவு நோய் வேகமாக அதிகரித்து வருவதால் இந்த நிலைமை அதிக கவனம் செலுத்த வேண்டிய பிரச்சினையாக மாறியுள்ளது. மேலும், உடற்பயிற்சியின்றி அவர்களின் செயலற்ற வாழ்க்கை முறை இந்த சிக்கலை அதிகப்படுத்துகிறது. மற்றும் இது நாட்டின் பணியாளர்களை நேரடியாகப் பாதிக்கிறது. ஆனால், ஆச்சரியம் என்னவென்றால், இந்த நாட்டில் கணிசமான எண்ணிக்கையிலான மக்கள், சுமார் ஒரு மில்லியன், தங்களுக்கு நீரிழிவு நோய் இருக்கிறதா என்று தெரியாதுள்ளனர்.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட பிரபல நாளமில்லாச் சுரப்பியியல் நிபுணரும் உட்சுரப்பியல் பீடத்தின் தலைவருமான வைத்தியர் திமுத்து முதுகுடா சிறப்புரையாற்றினார். நீரிழிவு நோயின் பல்வேறு அம்சங்களைப் பற்றி விவாதித்த வைத்தியர், நீரிழிவு நோயின் தீவிரத்தன்மை மற்றும் அதைப் பற்றி அதிக விழிப்புணர்வு பெற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். மேலும், நிகழ்ச்சியில் பங்கேற்பவர்களுக்கு மாரடைப்பு, சிறுநீரக செயலிழப்பு உள்ளிட்ட இந்நோயின் தீவிரம் குறித்தும், சர்க்கரை நோய் பற்றிய தவறான புரிதல்களை அகற்றி, அதை பற்றிய சரியான தெளிவான புரிதலை வழங்குவதே தனது விரிவுரையின் முக்கிய நோக்கமாக இருந்தது. இரத்த சர்க்கரை அளவை பரிசோதித்தல் மற்றும் பயனுள்ள நீரிழிவு கட்டுப்பாட்டிற்கு ஆரோக்கியமான வாழ்க்கை முறையை தேர்ந்தெடுப்பதன் முக்கியத்துவத்தையும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், வைத்தியர் திமுத்து முத்துக்குடா, உடல்கூற்று நிபுணர் வைத்தியர் டி.கே.டி. மத்யூ, கண் வைத்திய நிபுணர் அமில டி சில்வா, இருதய வைத்திய நிபுணர் வைத்தியர் சந்திரிகா பொன்னம்பெரும, சிறுநீரக நோய் நிபுணர் வைத்தியர் உதன ரத்னபால, நிபுணத்துவ நிபுணரான ரேணுகா ஜயதிஸ்ஸ ஆகியோரைக் கொண்ட நிபுணர் குழுவொன்று. இந்த திட்டத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை ஆடை உற்பத்தி துறையை மேம்படுத்த அரசாங்கக் கொள்கையும் ஆதரவும் அவசியம்



**துன்பமான சம்பவங்கள், சில இயற்கையான நிகழ்வுகளே, இதனை யதார்த்தமாகப் புரிந்துகொள்ளும் பக்குவத்தினை, நாம் தான் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்**

முன்னேற்றத்தின் பல்வேறு நிலைகளைக் கட்டுப்படுத்துவதற்கான முக்கியத்துவத்தை வலியுறுத்தி, இலங்கையின் ஜவுளித் தேவையில் 50% - 60% இறக்குமதி செய்யப்படுவதாக ஜவுளி மற்றும் ஆடைத் துணை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் (FAAMA) தலைவர் சஹான் ராஜபக்ஷ தெரிவித்தார். இறக்குமதியின் மீதான இந்த சார்பு, தொழில்துறையின் முன்னணி நேரத்தை நீடிக்கிறது மற்றும் வேகத்தை மேம்படுத்துவதற்கும் சுறுசுறுப்பான மாதிரிகளைக் கையாளுவதற்குமான திறனைப் பாதிக்கிறது. குறிப்பிடத்தக்க வகையில், இந்த இறக்குமதிகளில் 40% பருத்தியைக் கொண்டுள்ளது, 70% செயற்கை நூல்களால் ஆனது.

இலங்கையின் ஜவுளி மற்றும் ஆடை உபகரண உற்பத்தியாளர்களின் வழிகாட்டி அமைப்பான FAAMA, கூட்டு ஆடைச் சங்கங்களின் மன்றத்தின் (JAAF) துணை அமைப்பாகும். 40க்கும் மேற்பட்ட உறுப்பு நிறுவனங்களைக் கொண்ட இந்தச் சங்கம், ஆடைத்துறையின் விநியோக சங்கிலிக்கான ஒருங்கிணைந்த குரலாக செயல்படுகிறது. ஜவுளி மற்றும் ஆடை உபகரண உற்பத்தியாளர்கள் வாய்ப்புகளை அடையாளம் காணவும், போக்குவரத்து, கொள்கைகள் மற்றும் உள்கட்டமைப்புகளை மேம்படுத்தவும் இணைந்து பணியாற்றுவதற்கு FAAMA உதவுகிறது.

உள்நாட்டுத் தொழிற்சாலைகளுக்குள் விநியோக சங்கிலிகளை உட்புகுத்துவது தயாரிப்பு நேரத்தைக் குறைக்கவும், ஏற்கனவே செங்குத்துச் சேர்க்கையை (*Vertical Integration*) கொண்டுள்ள நாடுகளுடன் இலங்கை போட்டியிடவும் உதவும் என்று ராஜபக்ஷ வலியுறுத்தினார். "சீனா, வியட்நாம் மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகள் அனைத்தும் செங்குத்துச் சேர்க்கையைக் கொண்டுள்ளன. இந்த செங்குத்துச் சேர்க்கையைக் கொண்டிருப்பது முதலீட்டாளர்கள் உள்ளூர் விநியோக சங்கிலியில் தயாரிப்புகளை இயற்கையாகவே உருவாக்க அனுமதிக்கும், இதன் விளைவாக சரக்குக் கட்டணங்கள் குறையும்" என்று அவர் கூறினார்.

ஜவுளி மற்றும் பருத்தி துணித் தொழில் செங்குத்து ஒருங்கிணைப்புக்கு பெரும் ஆற்றலைக் கொண்டுள்ளது என்பதை அவர் மீண்டும் வலியுறுத்தினார். தற்போது, தேவையான வளங்களில் 40-50% *Hayleys Fabric, Teejay* மற்றும் *Ocean Lanka* போன்ற நிறுவனங்களால் வழங்கப்படுகிறது. ஜவுளியின் செயல்பாட்டின் அடிப்படையில் மதிப்பு கூட்டப்பட்ட சந்தையே தொழில்துறையின் சிறப்பு.

ஜவுளி மற்றும் ஆடை அணிகலன்கள் உற்பத்தித் தொழிலுக்கு அரசாங்கக் கொள்கை ஆதரவு மிகவும் அவசியமாக உள்ளது, ஏனெனில் அது தொடர்ந்து அதிக மின்சாரம் மற்றும் தண்ணீர் கட்டணங்களை எதிர்த்து அந்தத் தொழிற்துறை போராடுகிறது, இது தொழில்துறை செயல்பாட்டு செலவுகளை அதிகரிக்கிறது. எளிமைப்படுத்தப்பட்ட பெறுமதி சேர் வரியை (SVAT) ஒழிப்பதன் மூலம் தொழில்துறையின் மீது ஏற்படுத்தக்கூடிய பாதகமான தாக்கம், வணிகங்களின் பணப்புழக்கத்தை பாதிக்கிறது என்பதையும் ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார். "ஆவணங்கள் மற்றும் செலவுகளின் அதிகரிப்புடன், முதலீட்டாளர்கள் இலங்கைக்குள் நுழைவதை ஊக்கப்படுத்துவார்கள்"

தயாரிப்பு மற்றும் இயந்திர மேம்பாட்டிற்கான அறிவைப் பயன்படுத்திக் கொள்வதற்காக வெளிநாட்டு நேரடி முதலீட்டின் மூலம் கூட்டாண்மைக்கான மகத்தான சாத்தியக்கூறுகளையும் தொழில்துறை காண்கிறது. "கடந்த சில வருடங்களாக தொழில்துறையில் அதிக முதலீடு இல்லை" என்று ராஜபக்ஷ கூறினார். "இலங்கையின் முதலீட்டுச் சூழலை மேம்படுத்துவது இலங்கையின் ஜவுளி மற்றும் ஆடை உபகரண உற்பத்தித் தொழிற்துறை மற்றும் அதன் விநியோகச் சங்கிலியை வலுப்படுத்துவதில் நிச்சயமாக ஒரு கருவியாக இருக்கும்" என அவர் மேலும் தெரிவித்தார்.

## 'Tags விருதுகள் 2023' தங்க விருதை வென்றது இலங்கை வங்கி




CA ஸ்ரீலங்காவினால் அண்மையில் நடத்தப்பட்ட TAGS விருதுகள் 2023இல் இலங்கை வங்கி தங்க விருதைப் பெற்றது. அரச வங்கிகள் பிரிவில் 2022ஆம் ஆண்டுக்கான *'Resilient Resolve Revive'* என்ற அதன் ஆண்டறிக்கைக்காக வங்கிக்கு இவ்விருது வழங்கப்பட்டது.

சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்தின் இலங்கை மற்றும் மாலைதீவிற்கான வெளிநாட்டு முகாமையாளர் அலெஜான்ட்ரோ அல்வாரெஸ் டி லா காம்பா மற்றும் இலங்கை மற்றும் மாலைதீவிற்கான நியூஸிலாந்தின் பதில் உயர் ஸ்தானிகர் அண்ட்ரூ டிராவலர் ஆகியோரின் பங்கேற்புடன் ஷங்ரிலாவில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இலங்கை வங்கியின் பிரதம நிதி அதிகாரி ருவான் குமார மற்றும் பல அதிகாரிகள் வங்கியின் சார்பாக இவ்விருதை பெற்றுக்கொண்டனர்.

வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், ஆளுகை மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றுக்கான அர்ப்பணிப்பு என்பது இலங்கை வங்கியின் அடிப்படை விழுமியங்கள் ஆகும். ஆகவே வங்கியானது இந்ம அங்கீகாரத்தின் பொருட்டு அதற்காகப் பாடுபட்ட அனைத்துப் பணியாளர்களுக்கும் பிற பங்குதாரர்களுக்கும் நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

'நிலைபேறான வளர்ச்சிக்கு வலுவூட்டுதல் - பெருநிறுவன அறிக்கையிடலின் பலத்தை ஒன்றுதிரட்டல்' என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற TAGs விருது வழங்கும் விழாவில் விருது வென்றதன் மூலம் வங்கியானது தகவல் பொதிந்த ஆண்டறிக்கைகளை வெளியிடுவதன் மூலம் பங்குதாரர்களுடனான தொடர்பாடல்களை ஊக்குவித்தல், நிதி மற்றும் நிதி அல்லாத தகவல்களைத் திறம்பட வழங்குவதை ஊக்குவித்தல், சட்டவாக்கத் தேவைப்பாடுகள் மற்றும் இலங்கை கணக்கியல் தரநிலைகளுக்கு (SLFRS) இணங்குதல் மற்றும் உலகளாவிய சிறந்த அறிக்கையிடல் நடைமுறைகளைப் பின்பற்றுதல் ஆகிய இலக்குகளை நிறைவேற்றியுள்ளது.

தொடர்பாடல், நிறுவனம் சார்ந்த இலக்குகள், செயல்திறன், உரிய வாடிக்கையாளர்களுக்கு உரிய இலக்குகளைக் கிட்டச் செய்வதில் பணியாளர்களுக்கும் முகாமைத்துவத்துக்கும் உள்ள ஆற்றல் ஆகியவற்றின் அடிப்படையில் வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அறிக்கையின் படைப்பாற்றல் மற்றும் தெளிவு என்பன தாண்டி, செயற்பாட்டின் அளவு சிக்கலான தன்மை மற்றும் செயற்பாட்டின் நுட்பம் போன்ற விடயங்களும் மதிப்பீட்டுச் செயற்பாட்டில் கருத்திற்கொள்ளப்பட்டன. வெற்றியாளர்கள் அனைத்துத் தொழிற்துறைகளில் இருந்தும் முற்றிலும் தகுதியின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.



## சிட்னி "உதயசூரியன்" கிழக்கு "உதயசூரியனுக்கு" சிலை

விபுலமாமணி
வி.ரி.சகாதேவராஜா




"சிட்னியில் வாழும் காரைதீவைச் சேர்ந்த "உதயசூரியன்" மாணவர் உதவி மையத்தின் தலைவரும், "உதயசூரியன்" பத்திரிகையின் நிர்வாக ஆசிரியருமான பிரபல பரோபகாரி நாகமணி குணரெத்தினம் "கிழக்கு உதயசூரியன்" முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாருக்குச் சிலை எடுக்கிறார்.

சுவாமிகள் பிறந்த இலங்கை திருநாட்டிற்கு வெளியே முதல் தடவையாகக் கடல் கடந்த நாடுகளில் சுவாமிகளின் திருவுருவச் சிலை நிறுவும் முதல் வரலாற்று நிகழ்வு இதுவாகும்.

இச்சிலை சுவாமி விபுலானந்த அடிகளாரின் 132ஆவது ஜனன தினமான 27.03.2024ஆம் திகதிக்குப் பின்வரும் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிட்னி மாநகரில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இச்சிலை திறப்பு விழாவிற்கு உலக நாடுகளிலிருந்து குறிப்பாக இந்தியா லண்டன் கனடா சிங்கப்பூர் மலேசியா பிரான்ஸ் இலங்கை போன்ற நாடுகளிலிருந்து பல பேராளர்கள் சிட்னிக்கு வருகைதரவிருக்கின்றனர்.

வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளார் பிறந்த காரைதீவு மண்ணிலிருந்து சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்ற முன்னாள் தலைவரும் ஆலோசகருமான விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா தலைமையிலும் மட்டக்களப்பு மண்ணிலிருந்து மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத் தலைவர் வி.ரஞ்சிதமூர்த்தி மற்றும் முன்னாள் வலயக்கல்விப் பணிப்பாளர் க.பாஸ்கரன் தலைமையிலும் இச்சிலைத் திறப்பு விழாவில் கலந்து கொள்ள ஏற்பாடாகியுள்ளது.

உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியர் சுவாமி விபுலாநந்த அடிகளாருக்கு இலங்கை நாட்டிற்கு வெளியே முதன்முதல் அவுஸ்திரேலிய மண்ணில் முதலாவது வெண்கலச்சிலை திறந்து வைக்கப்படவிருக்கின்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பம் இது.

சுவாமியின் அபிமானியும் எழுத்தாளரும் சமூக சேவையாளருமான அவுஸ்திரேலியாவின் தலைநகர் சிட்னியில் வாழும் காரைதீவைச் சேர்ந்த திரு.நா.குணரெத்தினம் தன்னந்தனியாக நின்று இவ்வெண்கலச்சிலையை நிறுவவுள்ளார்.

சிலைதிறப்பு விழாவின்போது, "சிட்னியில் அடிகளார் படிவ மலர்" எனும் சிறப்பு மலரும் வெளியிடப்படவிருக்கிறது.

அன்றைய தினம் "அனைத்துலக சுவாமி விபுலானந்தர் நற்பணி மன்றம்" என்ற உலகளாவிய அமைப்பும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவிருக்கிறது.

இது இவ்வாறிருக்க உலகநாடுகளை உலுக்கிய கொடிய கொரோனா வைரஸ் தாக்கத்தின் காரணமாக அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் கடந்த 2020.04.04ஆம் திகதி நடைபெறவிருந்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரது திருவுருவச்சிலை திறப்பு விழா பிற்போடப்பட்டிருந்தமை தெரிந்ததே.

இதேவேளை, உதயசூரியன் குணரெத்தினம் காரைதீவு சண்முகா மகா வித்தியாலயத்தில் விபுலானந்த அடிகளாரின் திருவுருவச் சிலையை நிறுவியுள்ளார்.

அதேபோல், காரைதீவு சுவாமி விபுலானந்த கலாசார மண்டபத்திலும் விபுலானந்த சிலை நிறுவவுள்ளார்.

தனது பெற்றோரான காரைதீவைச் சேர்ந்த பொன்னம்பலம் நாகமணி தம்பதிகள் நினைவாகவும், தனது வளர்ப்புத் தந்தை காத்தமுத்து வேல்நாயகம் (தலைமை ஆசிரியர்) தம்பதிகளின் நினைவாகவும் இச்சிலைகள் நிறுவப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

சுவாமி விபுலானந்த அடிகளாரின் திருவுருவச் சிலை திறப்பு விழா சிறப்பாக நடைபெற இறைவனை பிரார்த்திப்போம்.



ரஷ்யா

# ரஷ்யா மீது ஏவுகணை தாக்குதல்; 21 பேர் பலி

உக்ரேன் - ரஷ்யா இடையேயான போர் 676ஆவது நாளாக நீடித்து வருகிறது. இதில், ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். இந்தப் போரில் உக்ரேனுக்கு, அமெரிக்கா உட்பட மேற்கத்திய நாடுகள் ஆயுத உதவிகளை வழங்கி வருகின்றன. அமைதி பேச்சுவார்த்தைக்கு இரு நாடுகளும் உடன்படாத நிலையில், போர் தொடர்ந்து நீடித்து வருகிறது.

இதனிடையே, உக்ரேனின் கீவ், டின்புரொ, கார்கிவ், லிவிவ் உள்ளிட்ட நகரங்கள் மீது கடந்த வெள்ளிக்கிழமை (29) ரஷ்யா தாக்குதல் நடத்தியது. போர் விமானங்கள், ஏவுகணைகள், டிரோன்கள் மூலம் நடத்தப்பட்ட தாக்குதலில், உக்ரேனில் 40 பேர் உயிரிழந்தனர். மேலும், 160 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்நிலையில், இந்த தாக்குதலுக்கு பதிலடியாக ரஷ்யா மீது உக்ரேன் சனிக்கிழமை (30) வான்வழி தாக்குதல் நடத்தியுள்ளது. டிரோன்கள், ஏவுகணைகள், போர் விமானங்கள் மூலம் ரஷ்யாவின் பெல்ஹொரட் நகர் மீது உக்ரேன் வான்வழி தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் 21 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும், 110 பேர் படுகாயமடைந்துள்ளனர்.



நியூசிலாந்து எதிர் பங்களாதேஷ்:

# தொடர் சமநிலையானது

பங்களாதேஷுக்கு எதிரான இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரை நியூசிலாந்து சமப்படுத்தியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், முதலாவது போட்டியில் பங்களாதேஷ் வென்றதோடு, இரண்டாவது போட்டியில் முடிவேதும் பெறப்படாத நிலையில், மௌன்ட் மகட்டரேயில் ஞாயிற்றுக்கிழமை (30) அதிகாலை நடைபெற்ற மூன்றாவது போட்டியில் டக்வேர்த் லூயிஸ் முறையில் நியூசிலாந்து வென்றமையைத் தொடர்ந்தே 1-1 என தொடர் சமநிலையில் முடிவடைந்தது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்தின் அணித்தலைவர், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ், டிம் சௌதி (2), அடம் மில்ன் (2), பென் சியர்ஸ் (2), மிற்செல் சான்ட்னெரிடம் (4) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 19.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 111 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, மஹெடி ஹஸன் (2), ஷொரிஃபுல் இஸ்லாமிடம் (2) விக்கெட்டுகளை இழந்து தடுமாறியபோதும் பின் அலென்னின் 38 (31) ஓட்டங்களுடனும், ஜேம்ஸ் நீஷம் ஆட்டமிழக்காமல் 28 (20), சான்ட்னெர் ஆட்டமிழக்காமல் 18 (20) ஓட்டங்களைப் பெற்று 14.4 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து, 95 ஓட்டங்களைப்பெற்ற நிலையில், மழை குறுக்கிட்டபோது, 17 ஓட்டங்களால் டக்வேர்த் லூயிஸ் முறையில் நியூசிலாந்து வென்றது. இப்போட்டியின் நாயகனாக சான்ட்னெரும், தொடரின் நாயகனாக ஷொரிஃபுல்லும் தெரிவாகினர்.



பாகிஸ்தான்

## இம்ரான் கானின் வேட்பு மனுக்கள் நிராகரிப்பு

பாகிஸ்தானில் பெப்ரவரி 8ஆம் திகதி நடைபெற உள்ள பாராளுமன்ற தேர்தலில், போட்டியிடுவதற்காக முன்னாள் கிரிக்கெட் வீரரும், முன்னாள் பிரதமருமான இம்ரான் கான் வேட்பு மனு தாக்கல் செய்துள்ளார்.

பஞ்சாப் மாகாணத்தில் உள்ள பாராளுமன்ற தொகுதிகளான லாகூர் மற்றும் மியான்வாலி ஆகிய 2 தொகுதிகளில் இம்ரான் கான் போட்டியிடுவதற்காக வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில், இம்ரான் கானின் வேட்பு மனுக்களை பாகிஸ்தான் தேர்தல் ஆணையம் சனிக்கிழமை (30) நிராகரித்துள்ளது.

லாகூரில் இருந்து நிராகரிக்கப்பட்ட வேட்பாளர்களின் பட்டியலில், அவரது வேட்பு மனுத் நிராகரிக்கப்பட்டது, ஏனெனில் அவர், அந்தத் தொகுதியில் பதிவுசெய்யப்பட்ட வாக்காளர் அல்ல என்பதாலும், நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டு தகுதி நீக்கம் செய்யப்பட்டவர் எனவும் பாகிஸ்தான் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

2018 முதல் 2022 வரை பதவியில் இருக்கும்போது அரசு பரிசுகளை சட்டவிரோதமாக விற்பனை செய்த குற்றத்திற்காக அவர் சிறையில் அடைக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.



இஸ்ரேல்

## "போர் இன்னும் பல மாதங்களுக்கு தொடரும்"

ஹமாஸ் அமைப்பினரின் கட்டுப்பாட்டில் உள்ள காசா நகரம் மீது இஸ்ரேல் போர் தொடுத்து வருகிறது. போர் தொடங்கிய சமயத்தில் வடக்கு காசாவை குறிவைத்து தாக்குதல் நடத்தி வந்த இஸ்ரேல், பின்னர் தெற்கு காசாவை நோக்கி தாக்குதல்களை விரிவுப்படுத்தியது.

அதன் தொடர்ச்சியாக கடந்த சில நாட்களாக மத்திய காசாவில் இஸ்ரேல் இராணுவம் தரை வழியாகவும், வான் வழியாகவும் தீவிரமாக தாக்குதல்களை நடத்தி வருகிறது. இஸ்ரேலின் இந்த தாக்குதல்களால் காசாவில் உயிரிழப்புகள் தொடர்ந்து அதிகரித்த வண்ணம் உள்ளன. அந்தவகையில், காசாவில் இதுவரை 21 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பலியாகியுள்ளனர்.

மேலும், இஸ்ரேல் நாளுக்கு நாள் தாக்குதல்களை தீவிரப்படுத்துவதால் பாதிகப்பட்ட மக்களுக்கு உதவிகளை கொண்டு சேர்ப்பதில் பாரிய சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால் பல இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த சூழலில் காசாவில் மனிதாபிமான நிலைமைகள் மிகவும் மோசமடைந்து வருவதாக ஐ.நா. எச்சரித்துள்ளது.

இந்நிலையில், "ஹமாஸுக்கு எதிரான போர் இன்னும் பல மாதங்களுக்கு தொடரும்" என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.




# இலங்கையணித் தலைவராக ஹஸரங்க

இலங்கையின் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான, இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளுக்கான அணித்தலைவராக தசுன் ஷானகவின் பதவிக்காலம் முடிவுக்கு வந்துள்ளது.

ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கு குசல் மென்டிஸையும், இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளுக்கு வனிடு ஹஸரங்கவையும் இலங்கையின் புதிய தேர்வுக் குழு நியமித்துள்ள நிலையிலேயே மேற்குறிப்பிட்டவாறு ஷானகவின் பதவிக்காலம் முடிவுக்கு வந்துள்ளது.

டெஸ்ட் போட்டிகளுக்கு திமுத் கருணாரத்ன தலைமை தாங்குகின்ற நிலையில், முதன்முறையாக இலங்கை மூன்று விதமான போட்டிகளுக்கும் மூன்று தலைவர்களைக் கொண்டிருக்கிறது.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## பொரெஸ்டிடம் தோற்ற யுனைட்டெட்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், நொட்டிங்ஹாம் பொரெஸ்டின் மைதானத்தில் சனிக்கிழமை (29) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைட்டெட் தோற்றது.

யுனைட்டெட் சார்பாகப் பெறப்பட்ட கோலை மார்க்கஸ் றஷ்ஃபோர்ட் பெற்றார். பொரெஸ்ட் சார்பாக நிக்கலஸ் டொமின்குயெஸ், மோர்கன் கிப்ஸ்-வைட் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இந்நிலையில், வொல்வர்ஹம்ப்டன் வொண்டரேர்ஸின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-3 என்ற கோல் கணக்கில் எவெர்ற்றன் தோற்றது.





புது டெல்லி

# "ராமர் கோவிலுக்கு வராதீர்கள்"

அயோத்தியில் ராமர் கோவிலின் திறப்பு விழா எதிர்வரும் ஜனவரி 22ஆம் திகதி பிரமாண்டமாக நடைபெறவுள்ளது. அன்று நடைபெறவுள்ள கும்பாபிஷேக விழாவில் கலந்துகொள்வதற்கு சுமார் 8,000 உயரதிகாரிகள் அழைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், தளத்தில் பணிபுரியும் 15% நபர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கிடையே, அயோத்தியில் புதிய விமான நிலையம் மற்றும் புதுப்பிக்கப்பட்ட ரயில் நிலையத்தைப் பிரதமர் மோடி சனிக்கிழமை (30) திறந்து வைத்துள்ளார்.

கோவிலைக் காண நாடு முழுவதிலுமிருந்து பக்தர்கள் ஏற்கெனவே வருகை தரத் தொடங்கியுள்ளனர்.

இந்நிலையில், ராமர் கோவில் திறப்பு விழாவுக்காக ஜனவரி 22ஆம் திகதி அன்று அயோத்திக்கு வர வேண்டாம் என பிரதமர் மோடி பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து பிரதமர் மோடி கூறுகையில், "பக்தர்களாகிய நாம் ராமருக்கு எந்த பிரச்சனையும் செய்ய விரும்ப மாட்டோம். பொது மக்கள் அனைவரும் ஜனவரி 23ஆம் திகதி முதல் நித்தியம் வரை வரலாம்... ராமர் கோவில் இன்றும் என்றென்றும் உள்ளது. ஜனவரி 22ஆம் திகதி ஒவ்வொரு இந்தியரும் தங்கள் வீட்டில் இருந்தவாறு தீபம் ஏற்ற வேண்டும்" என தெரிவித்துள்ளார்.

தேசிய சோட்டோகான் கராத்தே

## ராம் கராத்தே சங்கத்தின் மாணவர் பிரகாசிப்பு

வி. சுகிர்தகுமார்



தேசிய சோட்டோகான் கராத்தேயில் ராம் கராத்தே சங்கத்தின் மாணவர் எட்டு தங்கப் பதக்கங்கள் அடங்கலாக 33 பதங்கங்களை வென்று சாதனை படைத்தனர்.

இப்போட்டியில் சங்கத்தின் மாணவர்கள் 12 வெள்ளிப் பதக்கங்கள், 13 வெண்கலப் பதக்கங்களையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 01, ஜனவரி 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.